
# உ. வே. சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும்

தொகுதி – II



பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் வ. மகேஸ்வரன்

# உ.வே. சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் வ. மகேஸ்வரன்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2016 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் – 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் – 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 93 - 85267 - 10 - 9**


## International Conference on U.V. Swaminatha Iyer and Tamil Scholars of the 19th Century


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. S. Kumaran**<br>**Dr. V. Mageshwaran** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | November, 2016 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | |
| Prize | : | **Rs. 350/-** |

169. **முனைவர் ஆ. சுசித்ரா** 797
திரு.வி.க காட்டும் பெண்மையின் விழுமியங்கள்

170. **முனைவர் க. முருகேசன்** 802
உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் :
ஆசிரியர் பெயர் அறியப்படாத பாடல்கள்

# 170. உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் : ஆசிரியர் பெயர் அறியப்படாத பாடல்கள்



**முனைவர் க. முருகேசன்**
*தமிழ்த்துறைத் தலைவர்*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

தமிழ் இலக்கியங்கள் ஓலைச்சுவடிகளின் ஓரங்களில் ஒடுங்கிக் கிடந்தபோது, தேடல் எனும் கைவிளக்கைக் கொண்டு ஒளிபரப்பிக் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக்கியவர் உ.வே.சாமிநாதையராவார். கிடைத்தற்கரிய சுவடிப் பிரதிகளை ஆராய்ந்து நூதனமான முறையில் ஆராய்ச்சி உரையாக ஐயரவர்கள் எழுதிய குறுந்தொகை உரைநூல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டது. இவ்வுரையினைக் களமாகக் கொண்டு ஐயரவர்களின் உரைத்திறனைப் புலப்படுத்திக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும். குறுந்தொகையில் ஆசிரியர் பெயர் அறியப்படாத 10 பாடல்களுக்கு உ.வே.சா. வழங்கியுள்ள உரையை மட்டும் ஆய்வின் எல்லையாக இக்கட்டுரை எடுத்துக்கொண்டுள்ளது. இவ்வகையில் தலைவி கூற்றுப்பாடலாக ஐந்து பாடல்களும், தோழி கூற்றாக நான்கு பாடல்களும், தலைவன் கூற்றாக ஒரு பாடலும் காணக் கிடைக்கின்றன.

## தலைவி கூற்றும் உரை நயமும்

சங்கத் தலைவி தன் துயரைப் பொறுத்துக்கொள்ளக் கூடிய மனவலிமையுடையவளாயினும், மிக்க துன்பத்தால் தோழியிடம் குறைபடுமிடத்தில் தலைவனை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என உறுதியாக உரைப்பதைக் காணமுடிகின்றது. 'பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது' என்னும் துறையிலந்த,

> ***'உதுக்காண் அதுவே, இது என மொழிகோ?***
> ***நோன்சினை இருந்த இருந்தோட்டுப் புள்ளினம்***
> ***தாம்புணர்ந்த தமையின் பிரிந்தோர் உள்ளத்***
> ***தீம்குரல் அகவக் கேட்டும், நீங்கிய***
> ***ஏதிலாளர் இவண்வரின், 'போதின்***
> ***பொம்மல் ஓதியும் புனையல்***
> ***எம்மும் தொடாஅல்' என்குவெம் மன்னே(குறுந்., பா.191)***

என்ற பாடல் பறவையினங்களிடமிருந்து தலைவன் பாடம் கற்றிருந்தால் தன்னை விட்டுப் பிரிந்து சென்றிருக்க மாட்டான் என்றும், அவ்வாறு மனங்கொள்ளாமல் பிரிந்த அயலவராகிய தலைவன் வந்து தன்னைத்